THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

April, 1955

16 AUG 1956

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஏப்ரல், 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர்:—சங்கை C. P. ஹைனமென், விஞக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. இரக்ஷணிய யாத்திரீகம்
5. வேத வினாக்களுக்குரிய விடைகள்
6. இயேசுவின் ஜெபப்பள்ளி.
7. பாடுபட்டவார பக்திப் பாடல்கள்.
8. கி.மு. சங்கப் பொருட்கள்.
9. வேத வினாக்கள்.
10. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, ஏப்ரல் 1955 இலக்கம் 6

வருடசந்தா : 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்.

தல்லாகுளம், மதுரை,
மார்ச்சு 18, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

லுத்தரன் சபைப்பிரதிநிதிகளோடு பெங்களூரில் நடந்தஐக்ய கூட்டத்திலிருந்து இப்போதான் திரும்பினேன். இக்கூட்டங்கள் எளிதானவைகளல்ல. ஆனால் வாஸ்தவமான தேர்ச்சி காணப்பட்டதென்பதை நன்றியோடு கூறுகிறேன். கர்த்தருடைய திருவிருந்தின் சித்தார்த்தத்தைப் பற்றிப் பொதுவாய் ஒப்புககொள்ளப்பட்ட தாக்கீது ஒன்று தயாரிக்கப்பட்டது. ஒருவருக்கொருவர் நெருங்கி ஐக்கியப்படுவதற்கு இது பயன்படுமென நமது சபைகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பெங்களூருக்குப்போகுமுன் மேடாக் அத்தியட்சாதீனத்திலுள்ள செக்கந்தராபாத், மேடாக், முதலிய இடங்களைச சந்தித்து அங்கு அகில உலக திருச்சபைச் சங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றிப் பல உபந்நியாசங்கள் செய்தேன். 5000 பேர் ஆராதிக்கக்கூடியதும், அநேக மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்குத் தெரியக்கூடியதுமான மேடாக்கிலுள்ள மகிமையான ஆலயததைப் பார்த்து ஆவியில் மிகவும் எழுப்புதலடைந்தேன் கர்த்தருக்குச் சித்தமானால் மதுரையில் இப்படிப்பட்ட ஒரு ஆலயம் கட்டப்படவேண்டுமென்ற புதியதோர் ஆசையை இந்த அனுபவம் தூண்டிவிட்டது.

மதுரையிலுள்ள டோக் அம்மையார் கல்லூரியின் தலைவராகக்கடந்த நாலு ஆண்டுகளாய்த தொண்டாற்றிய கனம் டாக்டர் திலையம்பலம் அம்மாள் இலட்சுமணபுரியிலுள்ள தனது பழைய கல்லூரியில் பணியாற்ற ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இடத்தில் கனம் இ ஜேம்ஸ் அம்மாளைத் தலைவராக கல்லூரியின் சங்கத்தார்—நியமித்திருக்கிறார்கள். கனம் ஜேம்ஸ் அம்மாள் கேப்ரான் ஹாலில் கொஞ்சக்காலம் வேலை செய்தார்கள் இப்போது சென்னை பரி கிறிஸ்தோபர்-கல்லூரியில் வேலைபார்த்து வருகிறார்கள். 1956-ல் தமது பதவியை ஏற்றுக்கொள்வார்கள். அதுவரை கனம் உல்ஹெம்சன் அம்மாள் தலைவராக இருப்பார்கள்.

வீரம்பல் பாஸ்டரேட்டில் ஊழியம் செய்த கனம் என். கே சாமுவேல் ஐயரவர்கள் தகாத நடத்தையினிமித்தம் அத்தியட்சாதீன ஊழியத்திலிருந்து நீக்கப்பட்டு குருத்துவத்திலிருந்து விலக்கப்பட்டார் என்ற செய்தியை மிகுந்த துக்கத்தோடு உங்களுக்கு அறிவிக்கிறேன். 'இப்படிப்பட்ட காரியம் நம்மெல்லாருக்கும் வெட்கத்தையும் துக்கத்தையும் அளிக்கிறது. கடவுள் அவர்களுக்கு மெய்யான மனந்திரும்புதலையும் நவஇருதயத்தையும் அருள நம் யாவரும் அவருக்காகவும் அவர் மனைவிக்காகவும் ஜெபிக்க உங்களைக் கேட்கிறேன்.

வருகிற ஏப்ரல்மீ கனம் தானியேல் அவர்கள் திண்டுக்கல்லிலும் கனம் பால்கடம்பவனம் அவர்கள் கம்பம், கோம்பை, தேனி, வீரம்பல் முதலிய இடங்களிலும் எழுப்புதல் கூட்டங்கள் நடத்துவார்கள். விசேஷமாய் இக்கூட்டங்களுக்காகவும், அதோடு நமது முழுத்திருச்சபையின் எழுப்புதலுக்காகவும் நீங்கள் தொடர்ந்து ஜெபித்து வருமபடி கேட்டுக்கொள்ளுறேன்.

உயிர்த்தெழுந்த பெருந்திருநாளைக் கூடிய சீக்கிரம் நாம் கொண்டாடுவோம். இதைக் கொண்டாடும்போது எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வளவு பெரிய வெற்றி எவ்வளவு பெரியகிரயத்தால் சம்பாதிக்கப்பட்டதென்று, நாம் நினைவுகூர்வதோடு, அப்போஸ்தலன் எபி. 12 : 3-4ல் கூறிய வசனங்களையும் ஞாபகத்திற்குக்கொண்டு வருவோமாக:- ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே"

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்.

ஏப்ரல்	2—4.	அருப்புக்கோட்டை—திடப்படுத்தல்
,,	5.	கீழவாசல், மதுரை—திடப்படுத்தல்.
,,	6.	கோம்பை—திடப்படுத்தல்
,,	7.	பெரியகுளம்—திடப்படுத்தல்
,,	8—10.	திவ்ய பொறுமையின் ஆலயம்—மதுரை
,,	10	மேலவாசல், மதுரை—திடப்படுத்தல்
,,	14—15.	அத்தியட்சாதீன நிர்வாக சங்கம்
,,	17.	வடக்கு லோக்கல் கவுன்சில்
,,	23—24.	மண்டபசாலை—திடப்படுத்தல்

ஏப்ரல் 25—27. திருமங்கலம்—மத்திய கவுன்சில் ஞானபோத ஸ்தாபனக் கூட்டம்
,, 28—30. சாட்சியாபுரம்—தெற்கு, சாட்சியாபுரம் கவுன்சில் ,, ,,

மே 2— 4 மானாமதுரை—கிழக்கு, ராமநாதபுரம் கவுன்சில் ,,
,, 5— 7 வத்தலகுண்டு—மேற்கு, வடக்கு கவுன்சில் ,, ,,
,, 8. கொடைக்கானல்—திடப்படுத்தல்

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

மே 1. உயிர். திரு பின் ஞாயிறு 3
(பரி. பிலிப்பு, பரி யாக்கோபு திருநாள்).
8 உயிர். திரு. பின் ஞாயிறு 4.
15 ,, ,, 5.
19 பரத்துக்கேறின திருநாள்.
22 பரமேறின ஞாயிறு.
29 பரிசுத்த ஆவியின் திருநாள்

2. பந்தயக் கதைப் போட்டி.

தீர்ப்பளிக்கும் நீதிபதிகள் வந்த கதைகள் யாவும் முதற்தரமானதல்லவெனத்தீர்மானித்தனர். என்றாலும் விளம்பரம் செய்தபடி வந்தவைகளில் முதல் தரமான நாலு கதைகளைப் பொறுக்கி யெடுக்கவும், அவைகளுக்கு விளம்பரம் செய்த தொகையில் பாதியையாவது பரிசாக அளிக்கவும் விசேஷித்ததோர் கமிற்றியைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் கூடியசீக்கிரம் தங்கள் தீர்ப்பை அறிவிப்பார்கள். பரிசுக்குகந்ததாகத் தெரிந்தெடுக்கப்படும் கதைகள் சத்தியவர்த்தமானியில் மாதந்தோறும வெளிவரும்.

3. ஓய்வுநாள் பள்ளிக்கூட ஆசிரியர் பயிற்சி முகாம்.

இது வழக்கம் போல் குன்னூரில் முறையே ஏப்ரல் 14—30உ களிலும் மே 5—21உ களிலும் நடைபெறும் இப்பயிற்சி பெற விரும்பும் ஆசிரியர் இளைஞர் ஊழியக் காரியதரிசி கனம் கிரகரி ஐயர், தல்லாக்குளம், மதுரை, என்ற விலாசத்திற்கெழுதி விவரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

4. பாப்புவா மிஷனரி சத்தியா ஜோசப் ஐயரவர்களின் பிரிவு.

தென் இந்திய சபையின் முதல் மிஷனரி கனம் சத்யா ஜோசப் ஐயரவர்கள் பிப்ரவரி மாதம் 14-ம் தேதி பாப்புவா தீவின் குவானியில் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவரும், அம்மாளும், அவர்கள் மகன் வசந்தம்

1946-ஆம் டிசம்பர்மீ இந்தியாவை விட்டு புறப்பட்டு, 1947-ஆம் ஏப்ரல்மீ பாப்புவா போய்ச் சேர்ந்தார்கள். ஷீவா, கெப்பாரா என்கிற அத்தீவின் பாஷைகளைக் கற்றுக்கொண்டு 29 சங்கீதங்களையும் பரி. மாற்கு சுவிசேஷத்தையும் கெப்பாரா பாஷையில் மொழி பெயர்த்தார். மறுபடியும் அவர் திரும்பிப் போய் ஊழியம் செய்து ஓய்வு எடுத்துக் கொள்ளும் நோக்கத்தோடு திரும்ப வேண்டி ஏற்பாடு செய்திருந்தது அதற்குள் புதிய மிஷனரிகளை அனுப்பி அவ்வூழியத்தை தொடர்ந்து செய்ய சினாட் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் கர்த்தரின் நடத்துதல் வேறு விதமாயிருந்து, கனம் மிஷனரி அவர்களை தான் உழைத்து, நேசித்து வந்தவர்கள் மத்தியிலேயே இளைப்பாறும்படிச் செய்திருக்கிறார். ஆழ்ந்த துக்கத்துக்குள்ளாகியிருக்கும் கனம் அம்மாள் அவர்களுக்கும் மகனுக்கும் சகல ஆறுதலின் பராபரன் தேற்றுதலளிப்பாராக. அந்தக் காலியிடத்தைப் பூர்த்திசெய்யப் போகும் புது மிஷனரிகளை ஆண்டவர் திடப்படுத்த மன்றாடுவோமாக.

5. கிருபாகரர் அநாதாசிரமம், கல்லிமந்தயம்.

கிருபாகரர் அநாதாசிரமத்தைச் சார்ந்த புதிய கட்டிடம் (எட்டி ஹால்), மற்றும் ஆடு, கோழிப் பண்ணைகளின் திறப்பு விழா 11-1-'55 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெற்றது.

ரெவரண்டு ஹெச் எ, பாப்லி அவர்கள் திறப்பு விழாவை அன்பு கூர்ந்து நடத்தி வைத்தார்கள்.

மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் திரு. ஜோன்ரோடு வொயிட் அவர்கள் அவ்வமயம் நடக்கும் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து திருமதி வொயிட் அவர்கள் இல்லத்தைத் திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

பழனி மாவட்ட கல்வி அதிகாரி ஸ்ரீ. ஹரிஹரன் அவர்களும் காந்திகிராம் ரெவரண்டு ஆர். ஆர். கைதான் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

" கிருபாகரர் அநாதாசிரமம் 1953-ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று, துவங்கியது. மதுரை ஜில்லாவின் பிற்போக்குப் பிரதேசங்களைப் பற்றி நேரில் அறிந்து அநுபவமுள்ள பல நண்பர்களின் ஆசியுடன் இது ஸ்தாபிதமாயிற்று.

இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் சென்ற ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து மழை இராததால் பஞ்சம் நிலவி வந்தது பட்டினியும் கொடிய நோய்களும் பீடிக்கவே தன்னந்தனியே அந்தப் பக்கத்தில் அநேகக் குழந்தைகள் முகக்களையே மாறி அலைந்து திரிந்து கொண்டிருந்தாகள். அவர்கள் பெற்றோர்கள் சொந்த ஊரை விட்டுப் பிழைப்புக்காக வெளியூர் வநதவர்கள். வீடுவாசல் எல்லாம் பாழாகிப் பெற்றோர்களில் சிலர் கொடிய நோய்வாய்ப்பட்டும் பட்டினி காரணமாகவும், அளவுக்கு மீறிய துன்பம் அநுபவித்ததாலும் மாண்டு விட்டார்கள். பிழைக்க வழியின்றி வெயிலிலும், காற்றிலும் குழந்தைகள் அல்லாடித் திரிந்தார்கள். பாவம்!

இந்தக் குழந்தைகளுக்குத் தங்க இடமும் உணவும் மட்டும் இருந்தால் போதுமா? தங்களுக்கென்று ஓர் இல்லம் வேண்டும். தாங்கள் ஏதாவது ஓர் இடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் ஏற்படவேண்டுமென்றுதான் இந்த அநாதாசிரமத்தைத் தொடங்கினோம். சர்க்கார் ஸ்தாபனங்கள் எவற்றின் ஆதரவு மின்றி, இந்த அநாதைக் குழந்தைகளின் நிலைமையை கண்டும் அதுப்பற்றிக் கேட்டும் இரங்கிய பல நண்பர்களின் துணையாலேயே இதைத் தொடங்கினோம். நண்பர்கள் இப்படி உதவியிரா விட்டால் அந்தக குழநதைகளின் கதி என்னவாகி இருக்குமோ, பாவம்!

உலகில் பொதுவாக எதிர்பார்ப்பதற்கு மேல். நல்லெண்ணமும் இரக்கமும் உள்ளவர்கள்தான் அதிகமாக இருந்தார்கள் என்று அநுபவத்திலிருந்து உணர்ந்து கொண்டோம். மிகவும் ஏழைகளும் தங்களால் ஆன உதவி அளித்துள்ளார்கள். மற்றும் பல அன்பர்களின் துணையினுல் எங்கள் முயற்சிக்குப் பெரிதும் ஊக்கம் ஏற்பட்டு மனித சுபாவத்திலும் கடவுளிடத்தும் வைத்த எங்கள் நம்பிக்கை உறுதி பெற்று ஓங்கியது.

ஸ்தாபனம் ஓரளவு சொந்த முயற்சியால் நிலைநிற்கவேண்டி வெவ்வேறு திட்டங்கள் ஏற்பாடாகி வருகின்றன நண்பர்களின் நல்லாசி, அவர்கள் அளித்த உதவி இவைகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. என வடக்கு லோக்கல் கவுன்சில் தலைவர் எழுதுகிறூர்.

6. தெய்வீக அன்பு, 1955

இயேசுகிறிஸ்து நாதரின் வாழ்க்கைத் திருக்காட்சி

நடைபெறும் நாட்கள்

மார்ச்சு 26, ஏப்ரல் 2 & 8

நேரம் :—ஒவ்வொரு இரவிலும் முழு நாடகம் நடைபெறும்; 8 மணி $12\frac{1}{2}$ மணி வரை நடைபெறும். சுமார் 10மணி 20நிமிட இடைவேளை விடப்படும்.

இடம் :—அரங்சாலை—பசுமலை. அரங்கசாலை, மாலை 6:30 மணிக்குத் தான் திறக்கப்படும். அதற்கு முன் பார்வையாளர் உள்ளே வரக்கூடாது.

அனுமதி :—முதலிரவுத் திருக்காட்சிக்குக் கட்டணமில்லை. ஆனுல் மற்ற இரண்டு நாள் திருக்காட்சிக்கும் தலைக்கு 4 அணு வசூலிக்கப்படும். இந்நாட்களில் அமைதியாக, பக்தி உணர்வோடு பார்க்க ஏதுவாக இருக்கவே இந்த ஏற்பாடு. இக்காட்சியின் பலவகைச் செலவுகளுக்கும் நன்கொடை அளிக்க விரும்புவோர் ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ள கலயங்களில் காணிக்கை போடலாம்.

வேண்டுகோள் :—சிறுபிள்ளைகளைக் கூட்டிவராதிருப்பது நல்லது. நாடக ஆரம்ப முதல் கடைசிவரை, தெய்வ வழிபாட்டிற்குரிய ஜெப சிந்தையோடு யாவரும் அமைதியாக இருக்குமாறு அன்புகலந்த பணிவோடு வேண்டுகிறோம். கை தட்டல், பேசுதல், வாகிரி வஸ்துக்களை உபயோகித்தல் முதலியவற்றிற்கு இங்கு இடமில்லை.

வசதிகள் :—நாடக முடிவில் பசுமலையிலிருந்து மதுரை, மத்திய மோட்டார் நிலையத்திற்கும் மஹாலுக்கும் விசேஷ மோட்டார்கள் விட டி. வி. எஸ். கம்பெனியார் அன்புடன் இசைந்துள்ளார். அரங்க சாலையின் முன்வாசலில் சிற்றுண்டிச்சாலைகள் திறக்கப்படும். அர ஊரினர், இரவில் தங்க நேரிடின், தங்குவதற்கு வசதி கொடுப்படும், பெருமழை பெய்தால் காட்சி நடைபெறாது.

7. பசுமலைப் பள்ளிகளின் வாழ்க்கை ஆரம்பவிழா.

இது பசுமலை அரங்கசாலையில் மார்ச்சு 4—6உ களில் நடைபெற்றது. அச்சமயம் இங்குள்ள ஐந்து பள்ளிகளிலிருந்து 365 மாணவர் தங்கள் படிப்பை முடித்ததற்குச் சான்றாக நற்சாட்சிப்பத்திரம் பெற்றனர். இராமநாதபுரம் கலெக்டர் கனம் விசுவாசம் அவர்கள் தலைமை வகித்தார். வடக்கு லோக்கல் கவுன்சில் சேர்மன் கனம் தேவப்பிரகாசம் ஐயரவர்கள் வெளியேறும் மாணவர்களுக்குப் பொறுப்புணர்த்தியும் அமெரிக்கன் கல்லூரி துணைத்தலைமைப் பேராசிரியர் கனம் தேவராஜ் ஜி. பால் அவர்கள் பிரிவுப் பிரசங்கம் செய்தும் விழாவைச் சிறப்பித்தார்கள்.

8. தமிழ்நாடு கிறிஸ்தவ சங்கப் பொருளாதார சேவைக் கமிற்றி

அன்பிற்குரிய கனம் போதகர்மாருக்கும் மேல்நாட்டு தாய்ச்சபையைச் சேர்ந்த பிரதிநிதிகளான ஐயர்மாருக்கும் உபதேசிமார், உபாத்திமார் வேதாகமப் பாடசாலை, பலதரப்பட்ட உபாத்திமைத் தொழிலுக்காக பயிலும் மாணவ மாணவிகள் மற்றும் சகோதர சகோதரிகளுக்கும் பொருளாதார சேவைக் கமிட்டியின் பேரால் வாழ்த்துதல் சொல்லி எழுதும் நிருபம் :—

சென்ற மாதம் உங்கள் மாதாந்திர சஞ்சிகையின் வாயிலாக எங்கள் கமிட்டி தமிழ் நாட்டுத் திருச்சபைகளில் உள்ள ஏழை மக்கள் செய்யும் குடிசைக் கைத்தொழில் பொருட்களில், உற்பத்தியாக்கும் கிராமங்கள், அதற்கு சமீபமான இடங்களில் விற்றது போக மற்றவைகளை சென்னைக்கு வரவழைத்து அங்கே அதற்கென்று பிரத்தியேகமாக ஏற்படுத்த ஏற்பாடாகி வருகிற இடத்தில் வைத்து விற்பனையைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் கண்காக்ஷிசாலையமைக்கப்போவதாக தெரிவித்துள்ளோம், இவ்வித சேவைக்கு ஆண்டவர் அருளும் உங்கள் ஒவ்வொருவருடைய சமயோசித ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவையென்பதை வற்புறுத்திக் காட்ட விரும்புகிறோம்.

உங்கள் பிராந்தியங்களில் என்னென்ன பொருட்கள் கிடைக்கும் அப் பக்கங்களிலுள்ள கச்சாப் பொருட்களைக் (Raw products) கொண்டும், சமீப இடங்களில் கிடைக்கக்கூடிய கச்சாப் பொருட்களை வாங்கியும் ஏழை மக்களை என்னென்ன பொருட்களைச் செய்யும்படி தூண்டமுடியுமென்றும் எங்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்போது கிடைக்கும் பொருட்கள், அவைகளின் விலை, இனவகைளைக் குறித்து ஒவ்வொன்றிலும் இரண்டு மாதிரி சாமான்களுடன் சென்னையில் ஹண்டர்ஸ் ரோட்டு 9/9 நம்பரிலுள்ள ஸ்ரீ S. தம்பு, B A. அவர்களுக்கு அனுப்பினால் நல்ல சாமான்களுக்கு அதிகமாக ஆர்டர்கள் வாங்கி அனுப்ப உதவியாயிருக்கும். விலையைக் கணிப்பதில் அதை சிப்பங்களாகக்கட்டி ரயிலிலோ, பஸ்ஸிலோ அனுப்ப பிடிக்கும் செலவுகள் யாவையும் சேர்ப்பது முக்கியம்.

பலவிதமான கைத்தொழில்கள் நமது கிராமங்களில் செய்யப்படு கின்றன. எம்முடைய நோக்கம் நமது கிறிஸ்தவ சபையார்களில் கைத் தொழில்களில் விசேஷ நாட்டமுண்டாகி ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஏதாவது தங்கள் ஜீவனும்சத்துக்கு சமபாதித்துக்கொள்ள வேண்டுமென் பதே.

பலதரப்பட்ட கூடைகள் பாய்கள் கயிறுவகைகள் அழகான மரப் பொம்மைகள், நூற்ற நூல் நெய்த துணி இவ்விதமாக பலவகை சாமான்கள் கிராமங்களில் பெரும்பாலும் கூட்டுறவுமுறையில் இலாபகரமாகச் செய்ய லாம்.

நமது நாட்டில் வறுமைக்கு முக்கிய காரணங்களில் முதன்மையானது மக்களின் விழிப்பின்மை, அசமந்தம் எனலாம். "தலைவிதி அரைபட்டினி, முழுப்பட்டினியாய் சாகவேண்டிய" தென்று அங்கலாய்க்காமல் முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார் என்று தைரியங்கொண்டு வேலையில் முனைந் தால் பஞ்சம் பறந்தோடும். நமது விசுவாசத்துக்கும், முயற்சிக்கும் ஏற்ப அற்பத்திலிருந்து அற்புதத்தைச் செய்ய வல்ல அற்புதநாதரான இயேசு பெருமான் ஆசீர்வதித்து நமது கைப்பிரயாசையை பலிதமாக்குவார்.

சர்க்கார் ஸ்தாபனங்கள் மூலமாகவும் மற்றும் கிறிஸ்தவ சங்கங்களின் முயற்சியாலும் பல பயிற்சி சாலைகள் நடக்கின்றன கிராமங்களில் இவ் வித பயிற்சிகளில் ஈடுபட விரும்புவர்கள் எமக்கு எழுதி ஆலோசனைகளைப் பெறலாம்.

நாங்கள் பதிப்பிக்கும் கால்வருஷ சஞ்சிகை 'கிராமத்தொண்டன்' உங் களுக்கு சேவை செய்யவே. கொஞ்சகாலமாக இந்த கடிதத்தை எழுது கிறவர் அதிக வியாதியாயிருந்ததின் காரணமாக பத்திரிகை வெளிவர ஒழுங்கு தவறினது எங்களுக்கு விசனமே. இனி கூடுமான வரையில் ஒழுங்காக வரும். இவ்வருஷம் முடியமானால் இரண்டுமாதத்திற்கொரு முறை பதிப்பிக்க உத்தேசம். இரண்டு மாதத்திற் கொருமுறையோ, கால் வருஷப் பதிப்பாகவோ எப்படிவந்தாலும் வருஷத்துக்கு சந்தா

ஒரு ரூபாயாக கணித்திருக்கிறோம், அதில் என்னென்ன விஷயங்கள் வெளி வருமென்பது உங்கள் எல்லாரையும் பொறுத்தது. விவசாயம், சுகாதாரம், வாலிபர் பக்தியில் வேலை, கிறிஸ்தவ குடும்பப் பிரச்னைகள், கைத்தொழில்கள் அபிவிருத்தி இதுசம்பந்தமாக உங்களுக்கு எப்பேர்பட்ட ஆலோசனைகள் தேவை, நாங்கள் எந்தவிதமாக சஞ்சிகையின் மூலமாய் திருச்சபையின் உன்னத வாழ்வுக்குப் பணியாற்றலாம் என்பதை எங்களுக்கு எழுதினால் நாங்கள் அதற்குத்தக்கபடி எழுதுவோம். இதன் சம்பந்தமாக சர்க்கார் டிபார்ட்மெண்டுகள், மற்றும் பல ஸ்தாபனங்கள், தலைவர் இவர்களுடைய ஒத்துழைப்பை அடைந்துள்ளோம்.

எந்த வேலைக்கும் எழுதவும் படிக்கவும் கணக்கில் பயிற்சியும் வேண்டும். இதைக்குறித்து கிராமங்களின் தற்கால நிலை, ஜனங்களுடைய பொருளாதார நிலை என்னென்ன கைத்தொழில்கள் செய்யப்படுகின்றன, அவைகளில் விருத்தியடைய சாதனங்கள் யாவை என்பதை இதைப் படிக்கும் அன்பர்கள் எழுதினால் பேருபகாரமாயிருக்கும் விசேஷமாய இந்த விஷயங்களின் பேரில் கிராமங்களில் விடுமுறை நாட்களைக்கழிக்கும் வேதாகம வகுப்பு மாணவ மாணவிகள் உபாத்திமை தொழிற்பயிற்சி மாணவி மாணவர்கள் அதிகமாக விசாரணைசெய்து எழுதக்கூடும். சகல வித நிலைமையிலுள்ளவர்கள் கர்த்தரின் திருச்சபை அழகுடன் பொலிவு பெற எங்களுடன் ஒத்துழைக்க பணிவுடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருளாதாரக் கமிட்டியின் பேரால்
கனம் பவுல் மு. கோபால கிருஷ்ணன்.
செயலாளன் (காட்பாடி, வட ஆர்க்காடு ஜில்லா)

எழுதுகிறார்கள்.

9. அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியத்தின், ஜனவரி பிப்ரவரி மாதத்திய அறிக்கை.

(சா. ஜூலியன்)

கர்த்தருடைய பெரிதான கிருபையால், மேற்படி ஊழியம், கடந்த இருமாதங்களில் பின்வருமாறு நடைபெற்றது.

ஜனவரி மாதம் 22ம் 23ம் தேதிகளில், வத்தலகுண்டு சேகரத்தில் எனது ஊழியம் நடைபெற்றது. பகலில் ஓய்வு நாள் பாடசாலை மாணவருக்கு வகுப்பும் ஆலோசனைகளும் மாதிரி வகுப்புகளும் நடத்தப்பட்டன. இரவில் ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆலோசனைக்கூட்டம் நடந்தது.

ஜனவரி மாதம் 30ம் தேதியன்று மதுரை மேலவாசல் சேகர ஆலயத்தில், சிறுவருக்கான விசேஷித்த ஆராதனை நடைபெற்றது. அன்று மாலை 2-30 மணிககு, கீழவாசல் தேவாலயத்தில் மதுரை, பசுமலை ஓய்வு

நாட் பாடசாலை தலைவர்களது ஐக்ய சங்கத்தின் சார்பில், ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பங்காருப்பேட்டை திரு P. சாமுவேல் ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியருக்கென்று இரு மாதிரி பாடங்களும், சில நல்லாலோசனைகளும் தந்தனர்

பிப்ரவரி மாதம் 6ம் தேதியன்று ஜம்புரோபுரம் ஆலய ஆராதனையில் சிறுவருக்குகந்த பாகங்கள் வற்புறுத்தப்பட்டன. பின்னர் ஓயவுநாட் பாடசாலையில் பங்கெடுத்துக்கொண்டேன். மதுரை அமெரிக்கன் கல்லூரி கிறிஸ்தவ மாணவ கழகத்தைச சேர்ந்த இருவர், ஈண்டு ஆசிரியர்களாக இருப்பது பாராட்டத்தக்கது.

அன்று மாலை 2-30 மணிக்கு மதுரை, பசுமலை கி மூ சங்கங்களின் வருடாந்தர ராலிக் கூட்டம், மதுரை உவெப் ஞாபகார்த்த ஆலயத்தில் நடைபெற்றது. பல கி மூ. சங்கஙகள் மேற்படி வைபவத்தால் உற்சாகத்தோடு பங்கெடுத்துக கொண்டன.

பிப்ரவரி மாதம் 13ம் தேதி ரட்சண்யபுரம் ஆலய ஆராதனையை நடத்தும் பேறு பெற்றேன். பிறகு ஓய்வு நாட் பாடசாலை ஊழியத்தில் பங்கெடுத்தேன். மாலை ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியருக்கென்று சில ஆலோசனைகள் தரப்பட்டது. இங்கு Mr. P. சாமுவேல் அவர்களின் ஊழியத்தின் மூலம், ஏற்பட்டுள்ள ஜெபக்குழு கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

பிப்ரவரி மாதம் 20ம் தேதியன்று, அத்திகுளத்தில் உள்ள, ஆலயத்தில், காலை யாராதனையில் பிரசங்கித்து, ஓர் அத்தியக்ஷாதீன வாலிப சங்கமும் உருவாக உதவி செய்தேன். சீக்கிரத்தில் அச்சங்கத்தார் பிரதிக்கினை எடுத்துக்கொள்வார் என நம்புகிறேன். அவ்வூர் ஓய்வுநாட் பாடசாலை ஊழியம், ஓர் ஐந்தாம் பார மாணவரால் ஊக்கத்துடன் செய்யப்படுவது பாராட்டத்தக்கது. சாட்சியாபுரம் ஸ்மித் அம்மையார் தந்த பியானல் கிராப் ஒன்று, அங்கே உண்டு.

மாலையின் சந்தைப்பேட்டை வாலிப சங்க முக்கியஸ்தரோடு, பேசி, அத்தியக்ஷாதீன வாலிப சங்க வரம்புக்குள் தங்கள் சங்கத்தினை கொண்டு ஆலோசனைகள் சில தந்தேன்:

பிப்ரவரி மாதம் 27ம் தேதியன்று அறுப்புக்கோட்டை சேகரத்தில் என் ஊழியம் நடைபெற்றது. ஆலய ஆராதனையில் ஓய்வுநாட் பாடசாலை ஊழியத்தில் பெற்றோர் பஙகு என்ன என்பதுபற்றி கூறினேன். பின்னர ஓய்வுநாட் பாடசாலை ஊழியததில் கலந்துகொண்டேன்.

இங்கே மாணவரிடை காணும் ஜெப ஜீவியம் கண்டு கடவுளை ஸ்தோத்தரிக்கிறேன். மேலும் இங்கேயும "ஜெபக்குழுக்கள்" ஆரம்பிக்கப் பட்டுள்ளதை அறிவித்துக்கொள்கிறேன்.

மார்ச்சுமாதம் 4, 5, 6ம் தேதிகளில் மண்டபசாலையில், தெற்கு லோக்கல் கவுன்ஸிலின், ஓய்வுநாட் பாடசாலை, கி. மூ. சங்க, வாலிப சங்க தலைவர்கள் மகாநாடு நடைபெற்றது. மேற்படி மகா நாட்டில் யான் பெரும் பங்கு பெற்றேன்.

14-2-55ல் நடைபெற்ற ஜம்ரோபுரம் கிறிஸ்தவ வாலிப சங்க ஆண்டு விழாவில் கலந்துகொண்டேன்.

மேலே கூறப்பட்ட கி. மூ. சங்கங்கள், ஓய்வு நாட் பாடசாலைகள், வாலிப சங்கங்கள், யாவும் ஆண்டவர் நாம மகிமைக்கென்று அதிகமதிகமாய் பயன்பட அவரை வேண்டிக்கொள்கிறேன். அவருக்கே எல்லா மேன்மையும், கனமும், துதியும் சதாகாலங்களிலும் உண்டாவதாக

எனது மார்ச்சு மாத சுற்றுப்பிரயாண விபரம் பின்வருமாறு.

9—10	மேலைக்கிடாரம்
2— 3	கிளாஞ்சுனை பாஸ்ற்றரேட்டு
9—10	மேலைக்கிடாரம் பாஸ்ற்றரேட்டு.
15—17	வடக்கு லோக்கல் கவுன்ஸில் வாலிப, கி. மூ. சங்க, ஓய்வுநாட் பாடசாலை தலைவர்கள் மகா நாடு.
23—24	பழனி பாஸ்ற்றரேட்டு

சிறுவர் பாகம்

(கனம் தனமணி காபிரியேல் அம்மாள்)

"அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்"
(லூக்கா 1:14)

அமெரிக்காவிலே உள்ள ஒரு குடும்பத்திலே ஆபிரகாம் லின்கன் என்று ஒரு பையன் இருந்தான். அவனுடைய தகப்பனுருக்குத் தச்சுவேலை. அவனுடைய தாயார ஞானமும் பக்தியும் உள்ள அம்மாள். நான்ஸி என்பது அவர்கள் பெயர். தகப்பனுருககு வேலை கிடைக்கும் இடஙகளுக்கெல்லாம் மாறிமாறிக் குடியேறவேண்டியதாக இருந்ததால் ஆபிரகாம் லின்கன் ஒரு பள்ளிக்கூடத்திலும் படிககக கூடாமற்போயிற்று. ஆனுல் அவனுடைய தாயார் தன் மகனை அடுப்பண்டை இரவு நேரங்களில் உட்காரவைத்து எழுத வாசிககக் கற்றுக் கொடுத்தார்கள். தாயார் கற்பித்தவைகளை அச்சிறுவன் அதிக கவனமாகப் படித்துக்கொண்டு வந்தான். தன் மகன் அதிகம் புத்திக் கூர்மையுள்ளவனுக வரக்கூடும் என்று அந்த அம்மாள் நம்பினுர்கள்.

ஆபிரகாம் லின்கனுக்கு ஒன்பது வயதானது. ஐயோ! பாவம், அவனுடைய தாயாருக்கு வியாதி வந்து மரிக்கவேண்டியதாயிற்று. மரிப்

பதைப்பற்றி அவர்களுக்குப் பயமில்லா விட்டாலும், தனது அருமையான மகனைச் சிறு பிராயத்தில் விட்டுப் பிரிவதுதான் அதிகக் கவலையைத் தந்தது. லின்கனைக் கிட்ட வரச்செய்து அவனுக்குக் கடைசியாகச் சில நல்ல வார்த்தைகளைச் சொல்லிப்போக ஆசைப்பட்டார்கள். சத்தமாய்ப் பேச முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் பூரண அன்புடையதாய் இருந்தது. அவர்கள் லின்கனைப்பார்த்து,

"கண்மணீ! நான் சீக்கிரம் உன்னை விட்டுப்போய் விடுவேன். உன்னைப் பிரிவதுதான் எனக்கு அதிக வேதனை. கடவுள் உன்னோடு இருக்கிறார். அவரே உன்னைக் காப்பாராக— ஜன்னலுக்கு வெளியே பார், கடவுளின் அன்புள்ள கரங்கள் உண்டாக்கிய உலகம் எவ்வளவு அழகாய்க் காணப்படுகிறது! ஆம் கடவுள் இருக்கும் இடமெல்லாம் அழகுதான். நான் அவரை நேசிக்கிறேன். நீயும அவரை அறியவும், அவரை நேசிக்கவும் விரும்புகிறேன். உன்னை எங்களுக்கு அவர்தான் தந்தார். அதற்காக நானும் உன் தந்தையும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால் என் மகனே நீ, கைக்கொள்ளவேண்டிய கட்டளை:—

"எல்லோரையும் நேசி—எவருக்கும் இடையூறு பண்ணாதே பொய் சொல்லாதே—குடிக்காதே. அப்பொழுது உலகம் உன் பிறப்பினிமித்தம் சந்தோஷப்படும்." என்று சொன்னார்கள். பையனின் தகப்பனார் அந்த அம்மாளைப் பார்த்து, "நான்ஸி நீ நன்றாய்ப் பாடுவாய், உன்னைப் போல பாடுவதற்கு லின்கனுக்குக் குரல் இல்லையே" என்று சொன்னார். அதற்கு அவர்கள், "லின்கனுக்குப் பாடக்குரல் இல்லை தான். ஆனால் என்னுடைய இருதயம் அவனுக்கு உண்டு அதனால் அநேகரைப் பாடச் செய்வான்" என்று சொல்லி மரித்துப்போனார்கள். அச் சிறு பையனுக்குத் தாயாரின் மரணம் அதிக மனவேதனையைக் கொடுத்தது. ஆனாலும் அவர்கள் கடைசியாகச் சொல்லிப்போன அருமையான வார்த்தைகளை மனதில் வைத்துக் கொண்டான்.

ஆபிரகாம் லின்கன் வளர்ந்து பெரியவரானார். அவனுடைய சிறிய தாயார் படிப்பு விஷயமாய் அதிகம் உதவி செய்தார்கள். லின்கன் தகப்பனுருக்குத் தச்சுவேலையில் உதவி செய்வார்— மரம் வெட்டுவார்-மரம் அறுப்பார்—தண்ணீர் சுமப்பார்— தோணி தள்ளி ஜனங்களை முகமலர்ச்சியோடு அக்கரை சேர்ப்பார்—தோட்டத்தில் வேலை செய்வார். இவ்விதமாக எந்த வேலைக்கும் ஆயத்தமாய் இருப்பார். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய வெட்கப்படமாட்டார். நல்ல பலசாலி—நன்றாய் விளையாடுவார்— அடுத்த கட்சிக்காரரை ஒருபோதும் ஏமாற்றமாட்டார்—முயற்சியும் சுறுசுறுப்பும் உள்ளவராய் எப்பொழுதும் காணப்படுவார் ஆகையால் கடவுள் இவரை உயர்த்தி அமெரிக்க நாட்டின் தலைவராக ஏற்படுத்தினார்.

ஆபிரகாம் லின்கன் பெரிய பதவியில் வந்தபடியால் அதிகாரமும் பெருமையுமுள்ளவராயிராமல் அதிகத் தாழ்மையுள்ளவராய் நடந்து கொண்டார். தன் அருமைத்தாயார் சொன்ன நல்ல நீதிமொழிகளை மறக்கவேயில்லை. "பிறரில் அன்பு கூரு" என்ற வாக்கை நிறைவேற்றும் படி எத்தனையோ அன்பின் செய்கைகளைச் செய்து வந்தார்.

அவர் நாட்டிற்குத் தலைவராக வந்தவுடனே அடிமைகளுக்குச் சுயாதீனம் அளிக்க அதிக முயற்சி செய்தார். ஆப்பிரிக்காவில் நாகரீகமில்லாத கருப்பு மனிதர்களை அமெரிக்கா நாடுகளிலுள்ள வெள்ளைக்காரர் விலைக்கு வாங்கி மிருகங்களைப் போலவே அவர்களை எண்ணி, நிலங்களைப் பண்படுத்தவும் வீடுகளில் செய்யும் கடினமான சகல வேலைகளையும் இரக்கமில்லாமல் செய்யச சொல்லுவார்கள். அவர்கள் குடும்பமாக வாழமுடியாது. தகப்பனை ஒருவருக்கும், தாயை இன்னொருவருக்கும், பிள்ளைகளை வேறொருவருக்கும் விற்றுப்போடுவார்கள். சொந்த வீடு அவர்களுக்கிராது. இவவிதமாக அவர்கள படும் கஷ்டங்களைக் கண்ட ஜனாதிபதி ஆபிரகாம் லின்கன் தமது தேசத்தாரோடு அடிமைகளுக்குச் சுயாதீனம் அளிக்க வேண்டும், அடிமைகளை வைத்திருப்பது பாவம் என்று சொல்லி வாதாடினார். ஜனங்களில் அநேகர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஏனென்றால் அடிமைகளால்தான் தாங்கள் பணம் பெருக்கமுடியும் ஆனால் ஆபிரகாம் லின்கன் தம்மோடு சேர்ந்த நியாயமுள்ள கொஞ்சப் பேரை வைத்துத் தைரியமாய எதிர்த்துப் போராடி ஜெயம் பெற்றார். லக்ஷக்கணக்கான அடிமைகளுக்குச் சுயாதீனம் அளித்தார். அதனால் அடிமைகளுக்குச் சொலலி முடியாத சந்தோஷம் உண்டானது அவாகள் எல்லாரும் ஒன்று கூடி விடுதலையின் கீதத்தை பெரிய சத்தத்தோடு பாடினார்கள் இவ்விதமாய் தாயார் சொன்னபடி அவர் அநேகரைப் பாடவைத்தார்.

ஒரு முறை ஆஸ்பத்திரிக்குப்போய், யுத்தத்தில் காயப்பட்டவர்களைப் பார்வையிட்டுக்கொண்டு வந்தார். ஒவ்வொருவரையும் அனுதாபத்தோடு பார்த்துக்கொண்டு வந்தபோது பதினாறு வயதுள்ள ஒரு சிறுவன் அங்கே அதிகக் காயப்பட்டுச் சாகுந்தருவாயில் இருந்தான். ஜனாதிபதி, அப் பையனைப் பார்த்துப் பரிதாபப்பட்டு "மகனே, நான் உனக்கு என்ன செய்யவேண்டும்," என்று கேட்டார், அந்தப் பையன் அவரைப்பார்த்து, "என் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும்" என்றான். அப்பெரியார் சந்தோஷத்தோடு அவன் படுக்கையண்டை உட்கார்ந்து. பேனாவை எடுதது, அச்சிறுவன் தன் தாயாருக்குச் சொன்ன எல்லா விஷயங்களையும் விபரமாய் எழுதி கடிதத்தை மடித்துத் தன் சட்டைப் பையில் வைத்துக கொண்டு, "நானே உன் கடிதத்தைத் தபாலில் சேர்த்து விடுகிறேன் —இன்னும் ஏதாவது உதவிசெய்ய நான் வேண்டுமா" என்று கேட்டார். சாகப்போகிற அந்த அனாதப் பையனுக்கு அந்தப் பெரிய உத்தியோகஸ்தரிடம் பெறக்கூடிய உதவி ஒன்றுமில்லை. ஆனால் அவருடைய இரக்கம் நிறைந்த முகம் அவனுக்கு ஆறுதலையும் தைரியத்தையும் அளித்தது. அவனுடைய சொந்தத் தகப்பனைப் போலவே காணப்பட்டார். அதனால் தான் மரிக்கும் வரை அந்த அன்புநிறைந்த ஐயா தன் பக்கத்தில் இருந்தால் அதுவே இன்பம் என்று எண்ணி, "ஐயா நீங்கள் என் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளமாட்டீர்களா, நான் மரித்துப்போவேன்—அதிக நேரமாகாது". என்று கெஞ்சிக் கேட்டான் ஒரு பெரிய தேசத்தலைவராயிருந்த ஆபிரகாம் லின்கன் இக்காரியத்தைச் செய்யமுடியுமா? அவருக்கு எத்தனையோ வேலைகள் உண்டு. அவருக்காக வெளியே எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருப்பார்கள். சாயங்காலம் சுமார் நாலுமணி இருக்கும். அந்தப் பையனின் பக்கத்தில் அவனுடைய தகப்பனைப் போலவே உட்

கார்ந்திருந்தார். அவன் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு கண்களை மூடிப்படுத்திருந்தான். அப்புறம் ஒன்றும பேசவில்லை. சரியாய் ஆறு மணிக்கு மரித்தான். அவரைப்பிடித்திருந்த கை விட்டு விட்டது. இதுவரை அதிகப் பொறுமையாக உட்கார்ந்திருந்த ஜனாதிபதி லின்கன், எழுந்து அச்சிறுவனுக்காகக் கண்ணீர் விட்டு அழுதார்.

இப்படிப்பட்ட அன்பின் செய்கைகளைச் செய்து வந்த ஆபிரகாம் லின்கனை உலகத்தார் அதிகமாய்ப் புகழ்ந்து அவர் பிறப்பினிமித்தம் சந்தோஷப்படுகிறார்கள்.

கண்குளிரக் காணும் நாள்

(கனம் வீ. ப. நடராஜன், தமிழாசிரியர், பசுமலை)

தம்மாவியில் நைந்து பெருந்துயர் தாங்கித்,
தண்ணறும் பூங்காவில் ஒருதனி யாமத்தில்
விம்மா, உள்ளுடையா, நெட்டுயிர்ப்பு வீங்கி.
மெய்புழுங்கி, வெங்குருதி வெயர்வை சிந்தி,
அம்மானை விளித்திறைஞ்சி, அலககணுற்ற
அருந்தவத்தின் பெருந்தகையை, அருளின் வாழ்வை,
எம்மாவியக்கினியானை, எய்தி நாயேன்
என்று கொலோ கண்குளிரக் காணும் நாளே!

(இரட்சணிய மனோகரம்)

பாளையங்கோட்டைப் பக்தன் இரட்சணியக் கவிஞர், ஹென்றி அல்பிரடு கிருஷ்ணபிள்ளையவர்கள் இவ்வாறு பாடுகிறார். பாட்டைப் பதம் பிரித்து, கடினசொற்பொருளைப் புரிந்துகொண்டு மீண்டும், மீண்டும் பாடினால் எவரும் எளிதில் பொருள்கொள்ளலாம். இந்த லெந்து நாட்களில் நம்மை இரட்சணியக் கவிஞர் கெதசமனே அழைத்துச் செல்கின்றார். நாமும் போய் ஆண்டவன் அடைகின்ற பாடுகளை அதன் காரணத்தை அறிவோம்.

சொற்கள் பிரிவு :— *தம்மாவி — தம் + ஆவி ; தண்ணறும் — தண் + நறும் ; நெட்டுயிர்ப்பு — நெட்டு + உயிர்ப்பு ; விளித்திறைஞ்சி — விளித்து — இறைஞ்சி ; எம்மாவிக்கினியான் — எம் + ஆவிக்கு + இனியான் ;*

கடின சொற்பொருள்:— *நைந்தி — வருந்து ; தண் — குளிர்ச்சியான ; நறும் — வாசனையுள்ள ; பூங்கா — அழகிய சோலை ; யாமம் — நடுஇரவு விம்மா — பெருமூச்சால் உடலவிரியா ; உள்ளுடைய — உள்ளம் உடைய ; நெட்டுயிர்ப்பு — நீண்ட பெருமூச்சு ; விளித்து—கூப்பிடு ; இறைஞ்சி — வணங்கி ; அலக்கண் — துன்பம் ; நாயேன்— நாய்போன்ற அடியவனான நான்.*

சீடர்களுடன் கெத்சமனே போகிற ஆண்டவர் தாம்பிடிபடுவதற்கு முன்னர் உள்ள நிலையும், அடைகின்ற துயரத்தையும் இரட்சணியக் கவிஞர் சித்திரம்போல் காட்டியுள்ளார். நடு யாமம் தனியான ஓர் அழகிய சோலை, மரங்கள் நிறைய பூத்து மனம் கமழ்கின்றன. சீடர்களை விடுத்துத் தனியே போய் ஜெபநிலையில் இருக்கிறார், பெருந்துயரம் அடைகிறார். ஆவியில் வருந்துகிறார். நீண்ட பெருமூச்சு விடுகிறார் ஆவியில் வருந்துகிறார். விம்முகிறார். உள்ளம் உடைகிறார் தேகம் புழுங்குகிறது. இரத்த வியர்வை உடலெல்லாம் பொங்கி வழிகிறது. 'அப்பா பிதாவே' இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கச் செய்யும்' என அழைத்துப் பிதாவை வணங்குகிறார்.

இவ்வாறான அரிய தவநிலையில் நிற்கும் பெருந்தகுதிவாய்ந்த அருளின் அவதாரத்தை, எம் உயிர்க்காக மன்றாடும் இனியவனை, நாய்போன்ற நான் அணுகி கண்குளிரக் காணும் நாள் என்றைக்கோ ?

நம் பாவத்திற்காக கெத்சமனயில் மன்றாடும் இயேசுபெருமானை நாம் இந்நாட்களில் கண்குளிரக் காணவேண்டும். குற்றமற்ற மேனியில் இரத்த வியர்வை. மனிதரின் கொடிய பாவச்செயல்களை நினைத்துப் பெருமூச்சு, பாவம் நீக்கும் பலியாகப் போகும் நீண்ட எண்ணம். வந்த வேலை முடிந்ததென " அப்பா பிதாவே!" என அழைத்து அறிவிப்பு. இவவாறாக நாம் இந்நாட்களில் ஆண்டவரைக் கண்குளிரக் காண்போம்.

நமது பாவச்செயல்களுக்காகப் பரிந்துருகும் ஆண்டவரைப் பார்க்கப் பார்க்க, வழிதவறுகின்ற நம் செயல்கள் புலப்படும். நம் உள்ளமும் உடையும் நீதிவழி நிற்கத்துணிவுவரும். ஆண்டவரைக் கண்குளிரப் பாராதவர், பார்க்க மனமற்றவர் என்றென்றும் நல்வழியைக் காண இயலாது. ஆகையால் இரட்சணியக் கவிஞர் அழைப்புக்கு இசைந்து நாமும் இன்றே கண்குளிரக் காண்போம்.

வேதவினாக்களுக்குரிய விடைகள்

1 நியாதி. 3 12-17
2 I ராஜா 1 : 51
3 நீதிமொழி 6 : 9-11
4 மத்தியா—அப் 1 : 26
5 எசேக்கியேல் 2 : 1, 3, 6, 8
6 எரேமியா 2 : 13
7 ஆதி. 37 : 3—I சாமு 2 : 19
8 வெளி. 21 & 22
9 யோசு. 2 : 15, அப். 9 : 25
10 2000 முளம்—3000 அடி சுமார் ½ மைல்
11 ஆபிரகாம், காலேப், தாவீது
12 கலாத். 3 : 24

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினெட்டாம் பாடம்

" இந்தச் சுரூபம் யாருடையது?"
அல்லது
ஜெபம் மனித இயல்பிற்கு இசைந்தது

" அப்பொழுது அவர் : இந்தச் சுரூபமும், மேலெழுத்தும் யாருடையது ? என்று கேட்டார் " (மத் 22 : 20)

" பின்பு தேவன் : தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார் " (ஆதி. 1 : 26).

இயேசுவின் எதிரிகள், ' இராயனுக்கு வரி கொடுப்பது நியாயமா ? ' என்று கேட்டபொழுது, ' இந்தச் சுரூபம் யாருடையது ? ' என்ற கேள்வியைக் கேட்டு அவர்களை வாயடைத்தார். இந்தக் கேள்வியும், அதிலடங்கிய தத்துவமும் சகலத்திற்கும் பொருந்தும். முக்கியமாக மனிதனுக்கு அது மிகவும் பொருந்தும். மனிதனுடைய சாயலே அவனுடைய வாழ்க்கையை முடிவு செய்கிறது. கடவுளின் சாயலாயிருக்கும் மனிதன், கடவுளுக்கே உரியவன். கடவுளை நோக்கி ஜெபிக்கவே சிருஷ்டிக்கப்பட்டான். அவன் தெய்வீக உற்பத்தியை உடையவனாயிருப்பதால் அவனில் ஜெபமும் ஒரு பகுதி ஆகும். ஜெபம் கடவுளோடுகொண்டுள்ள அன்புள்ள தோழமை. ஜெபம் கடவுளின் பூலோகச் சாயலும் ரூபமுமாகும்.

ஜெபமானது என்ன என்பதைப்பற்றியும், அதற்கு கடவுளோடு உள்ள ஒப்பற்ற வல்லமை என்ன என்பதைப்பற்றியும் எவ்வளவு அதிகமாகச் சிந்திக்கிறோமோ அவ்வளவு அதிகமாக மனிதன் என்றால் என்ன ? அவன் யார் ? என்பவற்றைப்பற்றி ஆராய்ச்சிசெய்யத் தூண்டப்படுகிறோம். பாவத்தினால் கீழான நிலைமைக்குக் கொண்டுவரப்பட்ட மனிதனை, அவனது இன்றைய நிலைமையை வைத்து அவன் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கத்தை எளிதில் அறியமுடியாது எனினும், மனிதனின் படைப்பு வரலாற்றைக்கூறும் சத்திய வேதாகமத்தில், கடவுள் மனுஷனைச் சிருஷ்டித்த தன் நோக்கம் என்ன ? என்பதைப்பற்றியும், அந்நோக்கம் நிறைவேறுமாறு, கடவுள் மனிதனுக்குக் கொடுத்த சக்திகள் யாவை என்பதைப்பற்றியும் அறியலாம். பூமியை நிரப்பவும் அதனைக் கீழ்ப்படுத்தவும் பூமியையும் அதன் நிறைவையும் ஆண்டுகொள்ளவும் கடவுள் மனிதனைப் படைத்தார் (ஆதி 1 : 28) இந்த மூன்று சொற்களும், கடவுளின் பிரதிநிதியாக மனிதன் உலகை ஆளும்படி படைக்கப்பட்டான் என்பதை விளக்குகின்றன. கடவுளின் இராஜப் பிரதிநிதியாக, உலகில் கடவுளின் இடத்தில் அவன் இருக்கவேண்டியது. அவன் கடவுளுக்குக் கீழ்ப்பட்டவனாயிருக்கவேண்டியிருந்தாலும், அவன் உலகைத் தனக்கு கீழ்ப்படுத்தவேண்டியவன். உலகில் கடவுளால் செய்யப்படவேண்டியவை அனைத்தும், மனிதன்

மூலமாகவே செய்யப்பட வேண்டுமென்பது கடவுள் சித்தம். உலகின் சரித்திரம் மனிதன் கையிலேயே இருக்கும்படி கடவுள் விதித்தார்.

ஒரு பூலோக அரசன், தனது இராஜப் பிரதிநிதியை தூரத்திலுள்ள ஒரு மாகாணத்திற்கு அனுப்பும்போது, அவன் எத்தகைய கொள்கையை அனுசரிக்கவேண்டும் என்று கூறி அனுப்புவான். மேலும் மேற்படி கொள்கையை நிலைநாட்டுவதற்கும், பேரரசின் பெருமையை நிலைநிறுத்துவதற்கும் தேவையான, சைன்யங்களையும், இதர உதவிகளையும், பெற அவனுக்கு உரிமை உண்டு அரசனின் கொள்கை சரியானபடி அனுசரிக்கப்படாவிடில் அந்த இராஜப் பிரதிநிதியை நீக்கி, வேறொரு நல்ல இராஜப்பிரதிநிதியை அனுப்புகிறான். அரசனின் நம்பிக்கைக்கு அவன் பாத்திரவானாயிருந்தால் அவனது ஆலோசனைக்கு எப்பொழுதும் மதிப்புண்டு அப்படியே, கடவுளின் பிரதிநிதியாக மனிதன், உலகை ஆட்சி செய்திருக்கவேண்டும். அவனுடைய ஆலோசனைப்படியும், விண்ணப்பத்தின்படியும் மேலோக அரசனான கடவுள் பூலோகத்திற்கு வேண்டிய ஆசிகளை வழங்கியிருந்திருக்க வேண்டும் இந்த உலக இராஜரீகம் மனிதனால் செவ்வனே நடைபெறுவதற்கு ஜெபமே அஞ்சல் நிலையம். அதன் மூலமாகவே மேலோக அரசனான கடவுளுக்கும் அவரது பிரதிநிதியாகவிருந்து உலகையாளும் மனிதனுக்கும் தொடர்பு ஏற்படவேண்டும். உலகின் வாழ்வு மனிதனின் விருப்பம், சித்தம் ஜெபம், ஆகியவற்றின் வல்லமைக்குள் விடப்பட்டது.

ஆனால் பாவத்தால் இந்த ஒப்பற்ற உலக அரசுரிமை நாசமாயிற்று. மனிதனின் வீழ்ச்சி. சகல சிருஷ்டிகளையும் சாபத்துக்குள்ளாக்கிற்று. ஆனால் கடவுள் சீர் கெட்டுப்போன இந்த ஜெகத்தைச் சீர்படுத்த ஆபிரகாமை தெரிந்தெடுத்தார். அவன் சந்ததியில் இராஜாதி இராஜனைத் தோற்றுவித்தார். ஆபிரகாமின் வாழ்க்கையில் ஜெபத்தைப்பற்றிய சில பாடங்கள் உள. அவனது ஜெபம் அவனுக்குமட்டுமல்லாது மற்ற மக்களனைவருக்கும் ஆசீர்வாதத்தை அளித்தது. ஆபிரகாம தனக்காக ஜெபித்ததாக எங்கும் காணப்படவில்லை. மனிதன் தன்னைச்சுற்றி இருக்கிறவர்களின் சரித்திரத்தை எவ்வாறு உருவாக்கக்கூடும் என்பதற்கு, சோதோமுக்காகவும், லோத்துக்காகவும், அபிமலேக்குக்காகவும், இஸ்மவேலுக்காகவும் ஆபிரகாம் ஜெபித்தது சிறந்த எடுத்துக்காட்டாகும். இது கடவுளின் சிநேகிதனாயிருக்கும் ஒரு மனிதனின் வல்லமையைக் காட்டுகிறது.

கடவுள் இத்தகைய பெருந்திருப்பணியை மனிதன் கையில் ஒப்படைத்தார் என்று வேதம் போதிக்கிறது. மனிதனைத் தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் கடவுள் சிருஷ்டித்தபடியினால் இதனைத் தந்தார் அவனுக்கு. உள்ளான தகுதியில்லாமல் புறம்பான ஆட்சி மனிதனுக்குக் கொடுக்கப்படவில்லை மனிதனின் உள்ளான இயற்கை கடவுளின் ரூபத்திலேயே, கடவுளின் சாயலைத் தாங்கி உலகையாளும் சக்தியிருந்தது. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ளான ஒற்றுமையும் இசைவும் இருந்தது. அதுவே கடவுளுக்கும் அவரது உலகுக்கும் மனிதன் மத்தியஸ்தனாகும் சிலாக்கியத்தைத் தந்தது. தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் மனிதன் இருந்து கடவுளின் சித்தத்

தை உலகுக்கு விளக்கவும், கடவுளின் ஆசிகளை உலகுக்களிக்கவும் தக்க சிலாக்கியத்தை அதுவே மனிதனுக்களித்தது. மனிதன் கடவுளின் சாயலைத் தரிப்பதனாலேயே கடவுள் ஆட்சியை நடத்தவேண்டியிருந்தது. கடவுளின் நோக்கத்தையும், இரக்ஷிப்பின் வேலைத் திட்டத்தையும் நிறைவேற்றவே மனிதன் கடவுள் சாயலாகப் படைக்கப்பட்டான். உலகிற்குத் தேவையானதைக் கடவுளிடம விண்ணப்பிக்கவும் அவனை அவரிடம் பெற்று உலகுக்களிக்கும் சிலாக்கியமும் மனிதனுக்கு அருளப்பட்டன. கடவுளின் திட்டத்தை ஓரளவுக்குப் பாவம் தடை செய்தபோதிலும், மனிதன் விழாதிருந்திருந்தால எந்நிலையிருக்குமோ அந்நிலையை நிலைநாட்டவே ஜெபம் மனிதனுக்கு அருளப்பட்டது. எல்லையற்ற அரூபப் பொருளை அறியவும், அதனை மக்களுக்கு விளககவும், அதனோடு தொடர்புகொள்ளவும் உலகின் வாழ்வைப் பாதுகாககவும் கடவுள் சாயலாக மனிதன் படைக்கப்பட்டான்—ஜெபம் கருணைக்காகக் கதறுவதுமட்டுமன்று. மனிதன் அரசனை ஒத்த உரிமையோடு, நித்திய வஸ்துவின் யோசனைகளை நிறைவேற்றி, தான் தெய்வீகப் பிறப்புடையவன் என்றறிந்து தனது சித்தத்தை வெளியிடுவதே ஜெபம்.

பாவத்தாலழிவுண்டவையனைத்தும் கிருபையால் மீட்கப்பட்டன. முதல் ஆதாம் இழந்ததை இரண்டாம் ஆதாம் ஜெயித்து மீட்டார். கிறிஸ்துவுக்குள் மனிதன் தன் பூர்வ புனித நிலையைப் பெறுகிறான். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் திருச்சபை வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்கிறது. ‘நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்கு அருளப்படும்’ இந்த வாக்குத்தத்தம் நமது சுயநலத்திற்காகத் தரப்படவில்லை. அது நாம் கனிதரும் ஞானகத்திராட்சைச் செடி போலிருக்கும் நிலையைக் குறிக்கிறது. எனவே கடவுள் சாயலாகக் கடவுளுக்காகவும், அவரது மகிமைக்காகவும் வாழ்வதே மனிதன் கடன். எவன் அவரில் நிலைத்திருக்கின்றானோ, எவன் தன்னை வெறுத்து, கீழ்ப்படிதலும் தியாகமும் நிறைந்தவனாய் அவரில் வாசம்பண்ணுகிறானோ, எவன் தன் ஜீவனை இழந்து அவரில் அதைக் கண்டடைந்திருக்கின்றானோ, எவன் பிதாவின் காரியங்களுக்காகவும், அவரது இராஜ்யத்திற்காகவும், முற்றும் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கின்றானோ அவனுக்கே அந்த வாக்குத்தத்தம் இப்படிப்பட்டவனே தனது பூர்வ புனித நிலைக்கும், கடவுளின் சாயலுக்கும் அவரது ரூபத்திற்கும் வரும்படி மீட்கப்பட்டவன் இவனே உலகை ஆளும் வன்மை படைத்தவன். அப்படிப்பட்டவனே வானலோக வல்லமைகளைப் பெறவும் பிறருக்குத் தரவும் வல்லமை பெற்றவன் பரிசத்த தைரியத்தோடு அப்படிப்பட்டவன் தன் விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம் கடவுள் திருப்பிரசன்னத்தில் அப்படிப்பட்டவனே ஆசாரியனாய் வாசம் செய்யமுடியும். அப்படிப்பட்டவன் கையிலேயே உலகையாளும் வல்லமை உண்டு அப்படிப்பட்டவனுக்கே ‘நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்கு அருளப்படும்’ என்ற வாக்குத்தத்தம்.

ஜீவனுள்ள தேவனின் திருச்சபையே! உன் அழைப்பைப்பற்றி நீ அறிந்திருப்பதைப் பார்க்கிலும் உன் அழைப்பு உன்னதமானது; புனித

மானது. உன் உறுப்பினரைத் தமக்குள் இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், கடவுள் கொண்டு கடவுள் உலகை ஆள்வார். அவர்கள் ஜெபங்கள் விண்ணக ஆசிகளைத் தடுக்கவுமுடியும்—கொடுக்கவுமுடியும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவருள், தமது மீட்பைப்பற்றிமட்டும் கவலைகொள்ளாது, குமாரனைக்கொண்டு பிதா தமது திருவுள்ளச் சித்தத்தை நிறைவேற்றினதுபோலவே, தங்களைக்கொண்டும் கடவுள் தமது நோக்கத்தை நிறைவேற்றுமாறு தங்களை முற்றும் ஒப்புக்கொடுத்து அல்லும் பகலும் ஜெபிக்கிறவர் எவர்களோ, அவர்களுக்கே மனிதனின் பூர்வ புனித நிலை எத்தனை அதிசயமானது என்பதை மெய்ப்பிப்பார் உலகில் கடவுளின் சாயலைத் தன்னில் சுமந்து திரிகிறவன் என்ற முறையில் மனிதன் கையில் கடவுள் இந்த உலகை ஒப்படைத்தார். அவன் வீழ்ந்தபோது அவனோடு எல்லாம் வீழ்ந்தன. சகல சிருஷ்டிகளும் பிரசவ வேதனைப்பட்டுத் தத்தளிக்கின்றன. ஆனால் மனிதன் இப்பொழுது மீட்கப்படுகிறான். பூர்வ நிலையையடையும் காலம் உதயமாகியுள்ளது. கடவுள் தமது நித்திய நோக்கத்தை நிறைவேற்றலும், அவரது இராஜ்யம் வருதலும் யாரைப் பொருத்துளதெனில், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவரையே தங்கள் தலைவராகவும், அவரையே தங்கள் ஆசாரிய அரசனாகவும் கொள்கிறவர்கள் எவர்களோ அவர்களே தாங்கள் கேட்பதைப் பெறுவகொண்டோம் என்று சொல்லும் தைரியம் படைத்தவர்கள். கடவுள் சாயலைச் சுமந்து திரிபவனாக, உலகில் கடவுள் பிரதிநிதியாயிருப்பவனாக, மீட்கப்பட்ட விசுவாசி தனது ஜெபங்களால் உலகின் சரித்திரத்தைத் தீர்மானம் செய்கிறான். அன்று மனிதன் படைக்கப்பட்டான் இன்று மீண்டும் மீட்கப்பட்டுள்ளான். எதற்காக? ஜெபிக்கவும் தன் ஜெபத்தினால் உலகை யாளவும்.

குருத்தோலை ஞாயிறு.

(ஆர் இவர், ஆராரோ - கீர்த். 34 - நடை)

சங்கராபரணம். ஆதி தாளம்.

1. கோவேறு மறி ஏறி—பவனி
கோலமாய் வருகிறதார ?
கோமகன் ஏசு தாவீதின் மைந்தன்
கோதில்லா நசரேயன்.

2. ராஜகோலமதாய்—எருசலே
ரட்சகர் வருகின்றார்
ரத கஜ துரகம் ஏற அவர்க்கில்லை
மறிதான் வாகனமாம்.

3. திரள் ஜனம் கூடுகிறார்—அவர்
திரண்டேசு பின் செல்கிறார்
முன் நடப்பாரும் பின் நடப்பாரும்
முதல்வனைப் போற்றுகின்றார்

4. பாவர் பாடுகின்றார்—கிளைகளைப்
பலரும் பரப்புகின்றார்
விரிக்கிறார் சிலர் தமதாடையை அவர்முன்
பரிவுடனே விரைந்து.

5. பெருமானின் அருஞ்செயலை—எவரும்
பெருமையாய்ப் போற்றுகின்றார்
வெறுக்கிறார் பரிசேயர் அவர் பிரதாபத்தை
வெறுமனே வெகுளி கொண்டு.

6. சவுந்தர ரூபமதாய்—உன் ராஜா
சாந்தமாய் வருகின்றார்
சுதந்திரமாய் இவர் நீதியோடெங்கும்
சந்ததம் அரசாள்வார்.

7. கர்த்தரின் நாமத்திலே வருபவர்
தோத்திரப் பாத்திரரே
பார்த்து உன் பர்த்தாவை சீயோன் குமாரியே
பூரித்துக் கெம்பீரி.

8. பரமனைப் போற்றிடுவோம்—அவர் பேரைப்
பாரினில் சாற்றிடுவோம்
பார்த்திபன் தாவீதின் சேயனுக் கோசன்னா
பாரத்தில் யுக யுகமும்.

C. J. LUCAS, M.A., L.T.

சிலுவை என் மகிமை.

(ஆவியாம் ஈசனே - கீர்த். 14 - நடை)

முகாரி. சாபு தாளம்.

பல்லவி

ஏசுவின் சிலுவையே, எக்காலும் என் மகிமை
என் பாக்கியமும் அதுவே.

அனுபல்லவி

காலங்களுக்கு மேலாய், ஓங்கி உயர்ந்து நின்று
காந்தியும் மங்கிடாது, ஜோதியுடன் ஜொலிக்கும்— ஏசு

சரணங்கள்

1. பங்கமில்லாமலே, எங்கும் இலங்கிடும்
புனித சரிதையின் மர்மத்தை வெளியிடும்
இன்ப துன்பங்களிலும், ஏக்கம் உறும்பொழுதும்
எந்த சமயத்திலும், என்னை விட்டகலாத— ஏசு

2 அச்சமும் திகில்களும், அவநம்பிக்கையும்
ஆட்கொண்டு என்னை அமிழ்த்திடும் நேரத்திலும்
சாந்தி எனக்கு ஈந்து, அமைதியையும் தந்து
எந்த இடத்திலும் ஆறுதல்அளித்திடும்— ஏசு

3. இன்ப சூரியனின் இனிய வெளிச்சத்திலும்
அன்பும் ஆனந்தமும், அளவில்லாதிருக்கையில்
எந்தன் பாதை எல்லாம், எங்கும் மகிழ்ச்சியே
இடைவிடாது என்னைச் சூழ்ந்து இருக்கையிலும்— ஏசு

4. சாபம், துயரமும், சாவிடர் பிணிகளும்
சிலுவையினால் மிக புனிதமுமாகிவிடும்
அளவில்லா ஆனந்த ஆழியினில் ஆழ்ந்து
அனவரதமுமாண்டவருடன் நானிருக்க— ஏசு

5 என் ஏசு எனக்கீயும், சிலுவை எதுவானாலும்
அன்பாய் அதை எடுத்து, அவர் பின் என்றுஞ் செல்ல
அப்பா அருள் புரிந்து, ஆதரவு மளித்து
அனுதினமும் நடத்தி; முடிவில் முக்தியுந் தாராய்— ஏசு

C. J. LUCAS, M.A., L.T.

கி.மு. சங்கப் பொருட்கள்—ஏப்ரல், 1955

எதிர்கால நோக்கு (1) ஜெபத்தில்

(இளைஞர் ஊழியர், ஸ்ரீ சா. ஜூலியஸ்)

ஏப்ரல் 1. கண்காணிக்கப்பட்ட யாத்திரை அப். 13 : 1-5
2. பலனுள்ள ஊழியம் அப். 16 : 6-15
3. எதிர்கால நோக்கு (1) ஜெபத்தில் யோவான் 17 : 1-21

தற்பிரதிஷ்டை —(1) என் ஜீவன்
(2) என் கால்கள்

ஏப்ரல் 4. தேவனுக்கு முன்பாக யாத். 3 : 1-5
5. தெய்வநடத்துதல் சங். 18 : 24-36

ஏப்ரல் 6. *பரிசுத்த மார்க்கத்தில் நடத்தல் நீதி. 4 : 20-27*
7. *ஊழியம் செய்ய அழைக்கப்படல் எசே. 2 : 1-10*
8. *இயேசுவை தேட யோ. 20 : 1-10*
9. *இயேசுவை சேவிக்க லூக். 7 : 36-50*
10. *" எந்தன் ஜீவன், கால்கள், சொந்தமாக ஆளுமே "*
ஏசா. 52 : 1-50

ஈஸ்தர்—இயேசு ஜீவித்திருக்கிறார்—இப்போது

ஏப்ரல் 11. *மெய்யான ஆறுதல் யோ. 14 : 1-14*
12. *உயிர்த்தெழுதல் 1 கொரி. 15 : 12-22*
13. *இயேசு தம்மை உயிர்த்தெழுந்தவராக காண்பித்தல்*
(மரியாளுக்கு) யோ. 20 : 11-18
14. *வாக்குத்தத்தம் மத் 28 : 16-20*
15. *சாட்சி (பரி. பவுலின் 1கொரி. 15 : 1-11*
16. *மற்றவர்களுக்கு சாட்சி அப். 26 : 12-20 கலா. 2 : 20*

ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம்

(3) பரிசுத்த நாமம்

ஏப்ரல் 18. *நியாயப்பிரமாணம் லேவி. 19 : 11-18*
19. *"தேவன் அந்தகரணத்தில் உண்மையிருக்க விரும்புகிறார்"*
சங். 50 : 14-23
20. *இயேசுவும் மூன்றும் கற்பனையும் மத் 5 : 33-37*
21. *பரிசேயருக்கு ஐயோ மத். 23 : 16-23*
22. *பரி பவுல் சத்தியத்துக்காக ஆண்டவர் நாமத்தை உபயோகிக்கிறார் 2 கொரி 1 : 12-24*
23 *தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயம் நிறைவேறும்*
எபி. 6 : 11-20
24. *அவர் நாமம் பரிசுத்தமுள்ளது யாத். 6 : 11-20*
மத். 5 : 33-37

ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம்

(4) தேவனுடைய வழிகளில்

தேவனுடைய நாள்

ஏப்ரல் 25. *நித்திய உடன்படிக்கை யாத். 31 : 12-17*
26. *ஆராதனைக்கு அழைப்பு சங். 95 : 1-7*

ஏப்ரல் 27. ஓய்வு நாள் வாணிபத்துக் கெதிராக (தேவனோடு) உடன்படிக்கை நெகே. 10 : 28-33

28. இந்தக் கட்டளைக்கு இயேசுவின் கீழ்படிதல் மார். 1 : 16-28

29. கிறிஸ்தவனின் ஓய்வு நாள் அப். 20 : 7-12

30. கீழ்படிதலில் வெளிப்பட்ட அன்பு லூக். 23 : 47-56,

வேத விஞக்கள்

(கனம் செல்வம் டெயிலர் அம்மாள், பசுமலை)

1. எந்த ஸ்துலித்த அரசன் இஸ்ரவேலரை ஒடுக்கினன்
2. பலிபீடத்தின் கொம்புகள் என்றால் என்ன ? அதின் முக்கியம் எது ?
3. சோம்பேறியின் முழுவிஸ்தரிப்பைப்பற்றி எங்கே வாசிக்கிறோம் ?
4. யூதாசுக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷன் யார் ?
5. மனுபுத்திரன் என்று எந்த தீர்க்கதரிசி அழைக்கப்பட்டார் ?
6. இஸ்ரவேலரை தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகள் என்று எந்த தீர்க்கதரிசி அழைக்கிறார் ?
7. எந்த இரண்டு பரலியருடைய சட்டைகளைப்பற்றி வேதத்தில் வாசிக்கிறோம் ?
8. மோட்சத்தைப் பற்றிய முழுவர்ணிப்பை வேதத்தில் எங்கே வாசிக்கிறோம் ?
9. பட்டணத்து மதில்களின் ஜன்னல் வழியாய் இறக்கிவிடப்பட்ட மூவர் யாவர் ?
10. ஓய்வு நாள் பிரயாண தூரம் எவ்வளவு ?
11. எபிரோனில் வசித்த மூன்று முக்கிய புருஷர் யார் ?
12. நியாயப்பிரமாணத்தை உபாத்தியாயருக்கு ஒப்பிட்டுப் பேசியது யார் ? எங்கே ?

விளம்பரம்

1955ம் வருத்திய ஞானபோத ஸ்தாபனக் கூட்டங்களின் விவரம்

அடியில் கண்டபடி இந்த ஆண்டில் நாலு இடங்களில் நடை பெறும்

1. மத்திய லோக்கல் கவுன்சில்	திருமங்கலம்	ஏப்ரல் 25—27
2. தெற்கு லோக்கல் கவுன்சில் சாட்சியாபுரம் லோக்கல் கவுன்சில்	சாட்சியாபுரம்	,, 28—30
3. கிழக்கு லோக்கல் கவுன்சில் ராமநாதபுரம் லோக்கல் கவுன்சில்	மானாமதுரை	மே 2—4
4. மேற்கு லோக்கல் கவுன்சில் வடக்கு லோக்கல் கவுன்சில்	வத்தலக்குண்டு	,, 5—7

கூட்டங்கள் முதல் நாள் 10மணிக்கு ஆரம்பித்து மூன்றும் நாள் மதியம் வரை நடைபெறும் திட்டவட்டமான தினசரிக்கூட்டங்களின் விவரம் கூடிய சீக்கிரம் எல்லா லோக்கல் கவுன்சில் தலைவர்களுக்கும் அனுப்பப்படும்.

விளம்பரம்

வேத பாடசாலை, பசுமலை.

வருகிற ஜூன் மீ முதல் வேதப்பாடசாலையின் அடியிற்கண்ட வகுப்புக்கள் ஆரம்பிக்கும்:—

1. இரண்டுவருட வேதாகம ஸ்திரீ வகுப்பு. குறைந்த பட்சம் 8ம் வகுப்பாவது படித்திருப்பது நல்லது. வயது 20க்கு மேல் இருக்கவேண்டும் குறைந்த படிப்பாயிருந்தாலும் அனுபவமும் திறமையுமுள்ளவர்கள் சேர விரும்பினால் கவனிக்கப்படும்.

2. ஒருவருட உபதேசிமார் வகுப்பு. 8ம் வகுப்பு பாஸ்பண்ணி போதனுமுறைப் பயிற்சியும் சபை அனுபவமும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். குறைந்த படிப்பாயிருந்தால் சபை அனுபவமும் திறமையும் வேண்டும்.

சேர விரும்புகிறவர்கள் தங்கள் தங்கள் வட்டகையிலுள்ள லோக்கல் கவுன்சில் தலைவர்கள் மூலமாய் மனுப்பண்ணலாம். அப்ளிக்கேஷன் பாரம் வேண்டியவர்கள் பசுமலை வேதப்பாடசாலைத் தலைவருக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பரம்

சுற்றுக் கடிதம் 6

மதுரை ராமநாதபுரம் அத்யட்சாதீனம்,
பசுமலை வேதபாடசாலை
பசுமலை, மதுரை ஜில்லா,
ஏப்ரல் 1, 1955

'A Class' சுயேச்சை ஊழியருக்கு அழைப்பிதழ்

வேதபாடசாலை, பசுமலை, மே 10—13, 1955

அன்பார்ந்த நண்பர்களே,

உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறபடி நமது அத்தியட்சாதீனத்தின் ஏராளமான சபைகள், மேய்ப்பனின்றியும் ஞான ஆகாரமின்றியும் தத்தளிக்கிறார்கள். நமது அத்தியட்சாதீனத்தில் சுமார் 600 சபைகள் உள்ள கிராமங்கள் இருந்தும், ஒழுங்காய் ஆராதனை நடைபெறுவது சுமார் 350 கிராமங்களில் மாத்திரமே இப்பெருங் குறையை நிவிர்த்திக்கச் சுயேச்சை ஊழியராகிய நீங்கள் சேவை செய்ய முன்வந்ததுபற்றிக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். உங்களுக்கும் அத்தியட்சாதீனத்தின் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

1949—55ல் உங்களுக்காகப் பல இடங்களில் கான்பரன்ஸ் நடத்தினோம். போன நான்கு வருஷங்களிலும் மே மாதந்தோறும், பசுமலையில் நடந்த கூட்டத்திற்கும் உங்களில் சிலர் வந்தீர்கள். இக்கூட்டங்களில் பங்கெடுக்காத ஏனைய நண்பரும் நமது பற்பல சபைகளில் ஆராதனை நடத்தி வருகிறார்கள். இப்படி ஒழுங்காய் ஆராதனை நடத்துவதற்குறிய சில பாடங்களையும், குறிப்புகளையம் நீங்கள் படித்திருக்கிறீர்கள். தொடர்ச்சியாய் இப்படிப்பட்ட பயிற்சிகொடுக்கும் நோக்கத்தோடு, உங்களுக்காக இந்த வருஷமும் மே மா **10**உ **10** மணி முதல் **13**உ மதியம்வரை பசுமலையில் பொதுக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்திருக்கிறோம். வேதப்பாடசாலை ஆசிரியரும் மற்றும் பிரமுகர்களும் உங்களுக்கு வேண்டிய பாடங்களைச் சொல்லித் தருவார்கள். இவ்வருஷப் பாடப் புத்தகமாக மறுபடியும் பரி. யோவான் சுவிசேஷத்தைப் படித்துக்கொண்டுவாருங்கள்.

இக்கூட்டங்களுக்குரிய பிரயாணச் செலவை நீங்களே பார்த்துக்கொள்ளவேண்டும். உங்கள் சாப்பாடு வசதியைக் கூடுமான வரையில் நாங்கள் கவனித்துக்கொள்வோம்.

நீங்கள் வரும்போது வேத புஸ்தகம், புகழ்மாலை, 80 பக்க நோட்டு, பென்சில், படுக்கை, தம்ளர் முதலியவை கொண்டுவரவும். ஆரம்பமுதல்

கடைசிவரை இருக்கவும் வேண்டுகிறோம். வேத ஆராய்ச்சி, தியான முதலியவற்றோடு கீழ்கண்ட பாடங்களும் கற்பிக்கப்படும் :—

(1) ஆமோஸ், ஓசியா, யோவான் சுவிசேஷம்

(2) கிறிஸ்தவ வணக்கம்.

(3) எபிரேயர், திருச்சபை சரித்திரம்

(4) கிறிஸ்தவ மதச் சித்தாந்தங்கள்.

(5) பிரசங்கக் குறிப்புகள்.

(6) சங்கீதம்.

(7) சுகாதாரப் பாடங்கள்.

தொடர்ச்சியாய் இப்பயிற்சியில் பங்குபெற்று ஒழுங்காய்ச் சபைகளில் சுயேச்சை ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு அத்தியட்சருடைய லைசென்ஸ் வழங்கப்படவேண்டுமென்ற ஒழுங்கு ஆலோசனை செய்யப்பட்டு அமுலுக்கும் வந்துவிட்டது. லைசென்ஸ் பெற்றவர்களையும் இக்கூட்டங்களில் முக்கியமாய் எதிர்பார்க்கிறோம்.

இக்கூட்டங்களுக்கு நீங்கள் தயவுசெய்து வாருங்கள் ஏற்கனவே நீங்கள் வரும் தகவலை எங்களுக்குத் தெரிவித்தால், சாப்பாடு ஒழுங்கு செய்ய ஏதுவாகும். நீங்கள் வரும் தகவலைப்பற்றி உடனே பதில் எழுதக் கேட்கிறோம்.

கடவுள் உங்களோடுகூட இருப்பாராக!

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்புள்ள ஊழியர்

லெஸ்லி நியுபிகின், அத்தியட்சர்.

A. சாமுவேல், வேதப்பாடசாலைத் தலைவர்.

பந்தயக் கதைப்போட்டி

பரிசு வாங்க முன் வாருங்கள் ! எல்லாரும் இதில் பங்கெடுக்கலாம் !

முதல் பரிசு	ரூ. 20.
இரண்டாம் பரிசு	ரூ. 15.
மூன்றும் பரிசு	ரூ. 10.
நான்காம் பரிசு	ரூ. 5.

விதிகள்

1. இளைஞருக்குப் பொருத்தமான கதையாயிருக்கவேண்டும்.
2. கிறிஸ்தவகுணசீலம் என்ற பொருளின் மேல் கதை அமைந்திருக்கவேண்டும்.
3. தானே சுயேட்சையாய் எழுதுகிற கதையாயிருக்கவேண்டும். காப்பிபண்ணின கதையாயிருக்கக்கூடாது.
4. 1000 வார்த்தைகளுக்குமேல் எழுதக்கூடாது.
5. முழுக் காகிதத்தில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவாய் எழுதவும
6. நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.
7. தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள் அத்தியட்சாதீனப் பத்திரிகை "சத்தியவர்த்தமானி"யில் பிரசுரிக்கப்படும்.
8. எல்லாக் கதைகளும் நூல் கழகத்திற்குச் சொந்தமாகும்.
9. கதைகளை "ஏ சாமுவேல் ஐயர், வேதப்பாடசாலைத் தலைவர், பசுமலை" என்ற விலாசத்திற்கு ஜுலை 1, 1955க்கு முன் அனுப்பிவைக்கவும்.

Lenox Press, Pasumalai 29—3—1955--476 C.